உ
ஓம் சக்தி துணை

# துர்க்கா  மஞ்சரி


"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"
அபிராமி பட்டர்
பார்த்திப வருடம் சித்திரை 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2036 (13-4-2005)

வெளியீட்டாளர்
அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்

மலர்: 6 இதழ்: 2



7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: 604-521-3472


ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே!

# ஆலயமும் நாமும்

அம்பிகை அடியார்களே!

உங்கள் கைகளில் தவழுகின்ற மஞ்சரி மூலம் எங்கள் எண்ணங்களை தங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறோம். வழமைபோல நல்ல ஆன்மீக ஆக்கங்களுடன், இம்முறை "சிறுவர் மஞ்சரி" என்ற பக்கத்தையும் இணைத்துள்ளோம். தரமான உங்கள் படைப்புக்களை வரவேற்கிறோம். அடுத்த மஞ்சரியில் கூடுதலான பக்கங்களுடன் சிறுவர் மஞ்சரி மலரவேண்டும் என்று விரும்புகிறோம்.

எங்கள் குழந்தைகளின் நலம் கருதி, தாய்மொழி, சமய வகுப்புக்களை வாராந்தம் ஆலயத்தில் நடாத்துவதோடு, அவர்களுடைய திறமைகளை மெருகூட்டும் வகையிலே பல போட்டிகளை ஒழுங்குசெய்து, பரிசில்களை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறோம். இளையோருக்கும், முதியோருக்கும் பயன்படும் வகையிலே கணணி வகுப்புக்களை, யோகப் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று முதியோரின் உடல், உள நலம் பேணவேண்டி, எந்தவிதமான பாகுபாடுகளும் அற்ற வகையில், அனைத்து மக்களையும் இணைத்து, பிரிட்டிஷ் கொலம்பியா முதியோரின் "சாந்தி நிலையம்" என்ற அமைப்பை உருவாக்க தளம் அமைத்திருக்கிறோம். இது போன்ற புனிதமான சேவைகளில் உங்களையும் இணைத்துக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

ஆலயம் அமைக்கும் திருத்தொண்டில் பங்குகொள்ள பூர்வ புண்ணிய பலன் இருக்கவேண்டும். வாழ்க்கையில் கிடைத்தற்கரிய வாய்ப்பு எங்களுக்கெல்லாம் கிடைத்திருக்கிறது. அன்னையின் ஆலயத்தை அமைப்பதற்கு வங்கியில் பெற்ற கடனை கூடிய விரைவில் அடைக்க இயன்றவரை வாரி வழங்குங்கள். அன்னை மாரி அவள். வளமான வாழ்வை வாரி வழங்குவாள்.

ஆலயத்தில் தொண்டு செய்யவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அன்னையின் ஆலயத்தில் எத்தனையோ திருத்தொண்டுகள் உங்களுக்காகக் காத்துக் கிடக்கின்றன. "பங்குகொள்ளுங்கள்" என்று அன்புடன் வேண்டி, அனைவரும் நலமுடன் வாழ அகிலாண்ட நாயகியை பிரார்த்தித்து அமைகிறோம்.

-- ஆலய நிர்வாக சபைத் தொண்டர்கள்

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லைக் கேடு -குறள்

அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே! - தாயுமானவர்.

# கடம்பனும் இடும்பனும்

இடும்பன் அசுரகுலத்திற்கு வில்வித்தை கற்பிக்கும் ஓர் வில்லாசிரியனாகும். இவன் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்போருக்குக்கும் ஏனைய அசுரர்களுக்கும் வில்வித்தை கற்றுக்கொடுத்தான். வேற்படையால், சூராதி அசுரர்கள் அழிந்த பிற்பாடு தன்மனைவியுடன் ஒரு வனத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். திருத்தலம் இன்றும் இடும்பவனம் என்று வழங்கப்படுகின்றது.

இடும்பன் தன் மனைவியுடன் பல திருத்தலங்களுக்கும் சென்று தரிசிக்கும் போது அகத்திய முனிவரைக்கண்டு வணங்கி 'சுவாமி அடியேன் சூராதி அசுரர்களுக்கு வில்லாசிரியன் செவ்வேளை எவ்வேளையும் மறவாதவன், அடியேனைத் தங்கள் சீடருள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்' என வேண்டினான். அகத்தியர் அவன்மேல் கருணை கொண்டு அன்பனே! உனக்குக் கந்தவேள் கருணைபுரியும், நீயும் உன்மனைவியும் வெற்றிவேல் முருகனை வேண்டித் தவஞ்செய்து கொண்டு இருங்கள் எனக் கூறியருளினார்.

சில காலத்தின்பின் அகத்தியர் சிவகிரி, சத்கிரி என்னும் மலைகளை அங்கு தருவிப்பதற்கு திருவுளங்கொண்டு இடும்பனிடம், "அன்பனே! பன்னிரண்டு சோதிலிங்களுக்குள் ஒன்றாகிய கேதாரநாதர் எழுந்தருளியுள்ள திருக்கேதார மலையிலே பூச்சவனம் என்கின்ற வனம் உண்டு. அவ்விடம் சிவகிரி, சத்கிரி என்னும் பெயரையுடைய இரண்டு மலைகள் இருக்கின்றன. அம் மலைகள் அளவிட முடியாத மகிமையுடையன. அவைகளை எடுத்துக்கொண்டு நீ இவ்விடம் வரவேண்டும். இதனால் உன் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும். எனக் கட்டளையிட்டு அருளினார். இடும்பன் அவருடைய கட்டளைகளை சிரமேற் கொண்டு தன் மனைவியுடன் புறப்பட்டு பல சிவதலங்களையும் முருகதலங்களையும் தரிசித்தும் வழியில் கிடைக்கும் காய் கனி கிழங்குவகைகளையுண்டும் திருக்கேதாரத்தை அடைந்தான். அங்கே கேதார நாதரை வழிபட்டான்.

பின்பு அருகில் உள்ள பூச்சவனத்தை அடைந்தான். அங்கு சிவசொரூபமாகவும் சக்திசொரூபமாகவும் இருக்கும் சிவகிரி, சக்திகிரி ஆகிய மலைகளைக் கண்டு வணங்கினான். அகத்தியர் உபதேசித்த மூலமந்திரத்தை செபித்தான். அந்த மந்திரசக்தியால் பிரமதண்டமும், எட்டு நாகங்களும் அவன் முன் தோன்றின. நாகங்களைக் கயிறாகவும் பிரமதண்டத்தைத் தடியாகவும் உறிபோல் கட்டி தோளில் வைத்துக் கொண்டு இரண்டு மலைகளையும் பெயர்த்துக்கொண்டான். உறிபோல் செய்த தண்டத்தில் மலைகளை வைத்து, தோளில் சுமந்து முருகா முருகா எனக் கூறிக்கொண்டு பலஅடியார்கள் வணங்கும் அம்மலைகளைக் காவடியாக சுமந்து புறப்பட்டான்.

பசி களைப்பு வரும்போது அங்காங்கே காவடியை இறக்கி, காய், கனி, கிழங்கு முதலியவற்றை உண்டு இளைப்பாறிக் கொண்டு சென்றான். அப்போது வழியறியாது மயங்கிய பொழுது, கந்தப்பெருமான் ஓர் அரசகுமாரனாகத் தோன்றி அவனுக்கு

அருள் புரிந்து வாரககிரி வழியாக செல்லும்படி அருளினார். இடும்பனும் இடும்பியும் அப்படியே காவடியைத் தூக்கிக்கொண்டு வழி நடந்து திருவாவினன்குடியை அடைந்தனர். அப்போது மலைகள் மிகவும் பாரமாக இருந்தன. கால்கள் தளர்ந்து உடம்பு வியர்த்துப் பசி, தாகம் கூடியது.

சிவகிரி சத்கிரி மலைகளை அவ்விடம் வைத்து மனைவி தேடிய காய்கனி, கிழங்கு வகைகளையுண்டு, இளைப்பாறினான். மீண்டும் பொதிகை மலை செல்வதற்கு அவ்விரு மலைகளையும் தூக்க முயன்றான். அவை பெயரவில்லை கை கால் சோர்ந்தன. விழிகள் பிதுங்கின. உள்ளம் நிலை குலைந்தான். மனம் வாடினான்.

இதற்கு என்ன காரணம் என யோசித்தான். குருநாதன் கட்டளையாலும், மூல மந்திர சக்தியாலும் இத்தனை தூரம் வந்தேன் இன்னும் சிறிது தூரம் தானே உள்ளது, இம்மலைகள் அசைக்க முடியாமல் இருக்கின்றனவே. முருகா! கந்தா! வேலா! கருணாகரா! யாரோ மந்திர சூழ்ச்சி செய்திருக்க வேண்டும். அவைகளை கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும் என்று யோசித்தான். நான்கு திசைகளும் உற்று நோக்கினான். சிவகிரியில் ஒரு குமரன் நிற்பதைக் கண்டான். ஒருபுறம் சீற்றமும் மறுபுறம் அக்குமரனுடைய திருப்பொலிவைக்கண்டு மன நெகிழ்ச்சியும் கொண்டான். யுர் இவன்? தேவகுமரனா, மந்திர தந்திரத்தில் சித்தனா? மார்பிலே கடம்பமாலையும் கோவண உடையும் கையில் தண்டாயுதமும் உள்ளத்தை உருக்கும் காட்சியையுமுடைய இவன் யார்? எனக் கலங்கினான்.

"குழந்தாய் நீ யார்? மலையை விட்டு இறங்குக" என்றான் இடும்பன். நான் யாராக இருந்தாலும் உனக்கு என்ன? என்றான் குமரன். இடும்பனுக்கு கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. "ஏய்! சிறு பயலே என்னை நீ யார் என்று நினைத்தாய் போலும்! நான் சூரபத்மனுக்கு குருநாதன் அகத்திய முனிவரின் சீடன். என் பெயர் இடும்பன் என்னுடன் விவாதித்து வீணே மடியாதே விலகிப் போ" என்றான்.

"அசுரனே உன்னையும் உன்சீடன் சூரபத்மனையும் எனக்குத் தெரியும். இப்பெரிய மலையைச் சுமக்கும் உனக்கு சிறுபாலன் ஆகிய நான் ஒரு பாரமா? முடியுமானால் என்னையும் தூக்கிச் செல்" என்றான் குமரன். திரும்பவும் அசுரன் மலைகளை தூக்க முயன்றான். மலைகள் அசையவே இல்லை. கவலை அடைந்தான். பெருமுச்சு விட்டடான். மலையில் நிற்கும் குமரனைப்பார்த்து " ஏய் பாலனே நான் கொலை புரிகின்ற கொடிய அரக்கன் உன்னை இப்போதே கொன்று விடுவேன். ஆனபடியால் இம்மலையை விட்டு உடனே விலகிப்போய்விடு" என்றான்.

அசுரனே " இம்மலையில் வசிப்பதற்கு மிகவும் விருப்பமாகவும் சுகமாகவும் இருக்கின்றது. நான் இதனை விட்டுப்போக மாட்டேன் ஆனபடியால் நீ இவ்விடம் விட்டு உன் உயிரை பத்திரமாகக் கொண்டு உன் இருப்பிடம் போய்ச்சேர்" எனக் கூறினார்.

இடும்பன் கோபம் கொண்டு சீறினான். பற்களை நெறு நெறு என்று கடித்தான். மண்ணும் விண்ணும் அதிர ஆர்ப்பரித்தான். அந்தப் பாலகன் மீது பாய்ந்தான். வெட்டி வீழ்த்திய மரம் போல் இடும்பன் மண்ணில் சாய்ந்தான்.

பிரம தண்டமும், எட்டு நாகமும் அவ்விடமிருந்து மறைந்து நடந்தவற்றைக் கூறிவிட்டு தத்தம் இருப்பிடங்களுக்கு சென்றன.

இதனைக்கண்ட இடும்பி ஆறாத்துயரம் அடைந்து, கண்ணீர் பெருக பதறி அழுது புலம்பினாள். தன் கணவரைக் கொன்றவர் கந்தப்பெருமானே என தனது மதிநுட்பத்தால் உணர்ந்து கொண்டாள். குமரவேல் பாதங்களில் வீழ்ந்தாள். அவளுக்கு இரங்கிய முருகவேள் மயில் மீது காட்சி கொடுத்தருளினார். அவருடைய கருணைப் பார்வையால் இடும்பன் உயிர் பெற்று எழுந்தான். மயில் மீது நிற்கும் வேலனைக் கண்டான். ஆனந்தங்கொண்டான். பித்தன் போல் முருகா, வேலா, கந்தா, கடம்பா என்று பாடினான், ஆடினான். கந்தன் கருணையை நாடினான்.

கருணையுடன் அவனை பார்த்தருளி "என் அன்பிற்குறிய இடும்பனே! இனிமேல் இந்த சிவகிரி, சத்கிரி இவ்விடத்திலேயே இருக்கும். உன் அன்புக்கு நாம் கருணை புரிகின்றோம். இம்மலையில் பாதியில் நீ கோயில் கொண்டிருப்பாய் உன் அருகில் நாம் குராவிடிக் குமரனாக காட்சி தந்து அருள் பாலித்துக்கொண்டிருப்போம்" எனக் கூறினார்.

அடியார்கள், பால், தயிர், நெய், தேன், இளநீர் இவைகளை உன்னைப்போல் காவடியாகக் கட்டிக் கொணர்ந்து, கடம்பனாகிய என்னையும், இடும்பனாகிய உன்னையும் வழிபடட்டும். இம்மலை உள்ளவும் உன் புகழ் நிலை பெற்றிருக்கும். உனக்கு நாம் நமது கந்தசாயுச்சிய முத்திப்பேற்றை தருகின்றோம் எனக் கூறி மறைந்தருளினார். பழநி மலையில் நடுப்பகுதியில் இடும்பன் கோவிலும் அருகில் குராவடிவேலவன் கோவிலும் இன்றும் இருக்கின்றன. இதனால் முருகன் அடியார்கள் காவடி கொண்டு கடம்பனாகிய பழனி ஆண்டவரை வணங்கி, பின் இடும்பனை வழிபடுகிறார்கள்.

"இடும்பைக்கு இடும்பை தரும் இடும்பன் முருகனடியார்கட்கு அருள் புரியும் முதல்வனான்"

நன்றி: திரு. ஆர். வி. கந்தசாமி J.P( இளைப்பாறிய போதனாசிரியர்) ,
யாழ்ப்பாணம்.

# கஷ்டங்களைக் கஷ்டப்படுத்துவோம்

வாழ்க்கையில் கஷ்டங்களே வரக்கூடாது என்று சிலர் எதிர்பார்ப்பார்கள். இந்த நினைப்பு, குழந்தைத்தனமானது. தினந்தோறும் தீபாவளியாகவே இருக்காதா? என்று ஏங்குகிற, எதிர்பார்க்கிற மத்தாப்பூ மனசுக்காரர்கள் சின்னப்பிள்ளைகள். கஷ்டமே இல்லாத வாழ்க்கை என்பது யாருக்குமே அமைந்ததில்லை.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான் இன்பமும் துன்பமும். வாழ்வின் ஒருநிலை ஒரு நிகழ்ச்சி ஒரு நேரக்கட்டாயம் விதிப்படியும் இயற்கை நியதிப்படியும் நடந்தாக வேண்டிய நடப்பு. அந்தக் கஷ்டங்களை எதிர் கொள்வதும் வெல்வதும்தான் வாழ்வின் சுவை, சுகம், சுவாரஸ்யம். சவால்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் வழிவகைகள்.

கஷ்டம் என்ற ஒன்று வராவிட்டால் கடவுளை யார் நினைக்கப் போகிறார்கள்? பத்து மணி பஸ்ஸுக்குப் பதை பதைக்க ஓடி வருகிறோம். பஸ் கிடைத்தால் கடவுள் நினைப்பு வருவதில்லை. " இப்பதான் பஸ் போச்சு" என்று ஒருவர் சொன்னால் "அட கடவுளே எப்படி ஆபீஸ் போறது" என்று கடவுளை ஆபீஸ் வரை கூட்டிப் போகிறோம். கஷ்டங்கள் தான் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன.

கஷ்டத்துக்கான காரணங்களை ஆராயந்தால் நமக்கு அறிவுத்தெளிவுவரும். உலக வாழ்வின் உன்னதமான உண்மைகள் புலப்படும்.

மகாபாரதப் போர் முடிந்து, அஸ்தினாபுரம் வெறும் அஸ்தி புரமாக, சாம்பல் சாம்ராஜ்யமாகத் தருமரிடம் வந்தது. ஒரு நெருப்பு போருக்குப்பின் கிடைத்த குவைத் போல! தருமருக்கு ராஜ்ய ஆசையே இல்லை. கண்ணன்தான் தருமர் மனத்தை மாயமாய் மாற்றினான்.

தருமர் தலையில் தங்க மகுடம். பளபளப்பான பட்டாபிஷேக படாடோபம், விருந்து, மகிழ்ச்சி, விழாமின்னல் எல்லாம் முடிந்தது. அரண்மனை அமைதியடைந்த பின்னர் துவாரகைக்குக் கண்ணன் புறப்படும் மாலை நேரம். தருமரை வணங்கி, அருச்சுனனை அணைத்து, பீமனை தழுவி, நகுல சாகாதேவருக்கு நல்வாழ்த்துச் சொல்லித் தேரில் ஏறினான். தேரை ஓட்டிய கண்ணபிரானுடைய கண்கள் யாரையோ தேடின. கண்ணனை நோக்கி கைகூப்பி நின்ற அந்த திருவுருவத்தைக் கண்ணன் கண்டுபிடித்துவிட்டான். அந்தப் பாக்கியவதி குந்தி தேவிதான்.

"அத்தை, போய் வருகிறேன்" கண்ணன் கனிவான குரலில் விடை கேட்டான்

"கண்ணா நலமாகப் போய்வா புறப்படும் முன் எனக்கு ஒரு வரம் வேண்டுமே"......தயங்கினாள் குந்தி.

"என்ன கேட்பாள் ? ஜெப மாலை, நார்மாடி பூஜைக்கான உபகரணங்களில் ஒன்றிரண்டு அல்லது ஐந்து பிள்ளைகளுக்கும் ஆதரவு, அரவணைப்பு, ஆசீர்வாதம் அல்லது செத்துப் போன கர்ணனுக்குக் கதி மோட்சம் எது கேட்டாலும் தருவது

கடமைதானே.

“கேளுங்கள் அத்தை கேளுங்கள் எது கேட்டாலும் தருவேன். இந்த அஸ்தினாபுரத்திலேயே அதிகம் கஷ்டப்பட்டவர் நீங்கள்தான். உங்களுக்கில்லாத உரிமையா? கேளுங்கள்!” ஊக்கப்படுத்தினான் கண்ணபிரான்.

குந்தி கேட்டாள் “கண்ணா.......கஷ்டங்கள் வேண்டும். இன்னும் இன்னும் இன்னல்கள் வேண்டும்.”

அத்தனை பேருக்கும் அதிர்ச்சி. கண்ணன் பேசினான், “அத்தை...நீ பட்ட கஷ்டங்கள் போதாதா? பிறந்த வீட்டில் நீ வளரவில்லை. பெற்ற பிள்ளை கர்ணனை நீ வளர்க்கவில்லை. விரும்பாதபோது தாயானாய். விரும்பியபோது உன் தாய்மை சாபத்தால் தடைசெய்யப்பட்டது. பாண்டுவைப் பிரிந்து துயர் உற்றாய். துரியோதனாதிகள் உன் ஐந்து பிள்ளைகளைக் கொன்று விடுவார்களோ என்று அஞ்சி அஞ்சி அழுதாய். கெட்ட பிள்ளைகளை பெற்றால் எல்லோரும் கஷ்டப்படுவார்கள். நீயோ நல்ல பிள்ளைகளைப் பெற்றே துயர் உற்றாய். காட்டில் திரிந்தாய். பிச்சை எடுத்தாய். பசிக்கு நீ மெலிந்தாய். நல்ல நிலை வந்த போது தருமன் சூதாட நீ நலிந்தாய். அஸ்தினாபுரத்தில் நீ அவமானப்பட்டாய். பாரதப் போரிலும் பேரப்பிள்ளைகளை பலி கொடுத்து கண்ணீர்விட்டாய்.... இது போதாதா! இன்னுமா கஷ்டங்கள் வேண்டும்? கஷ்டமே இல்லாத வாழ்க்கையைத்தான் எல்லோரும் கேட்பார்கள். நீ கஷ்டத்தை கேட்கிறாயே ஏன்? ஏன்? ஏன்?.

குந்தியின் வரண்ட இதழ்களில் புன்னகை நெளிந்தது. மெதுவாகச் சொன்னாள். “என் ஒவ்வொரு கஷ்டத்திலும் நான் யாரை நினைத்தேன், உன்னைத்தானே. ஓடோடிவந்து நீதானே காப்பாற்றினாய். கஷ்டங்கள் இல்லை என்றால் உன்னை நினைக்கப்போவதில்லை. நீ எங்கள் பக்கம் வரப்போவதில்லை. என்னைப் பொறுத்தவரை கஷ்டங்கள் உன்னை அடையும் சாதனம்!.

இதுதான் குந்தி தவம்..........

திருவள்ளுவர் கூட “தனக்குவமை இல்லாதவனை மனக்கவலை தீர வணங்கு”, என்கிறார். என்ன பொருள்? மனக்கவலை இறைவனை அடைய ஒரு வழி என்பது திருக்குறள் நெறி. “சங்கடம் ஒஸ்தே வெட்கிடரமணா”. என்று தெலுங்கில் ஒரு பழமொழி இதே கருத்துக்குச் சான்று கூறும். கஷ்டமே இல்லாத வாழ்க்கை என்பது கற்பனை. சினிமாத்தனமான கற்பனை.

எனவே, இறைவனை வேண்டும் போது , “ கஷ்டங்களை வெல்லும் மனோபலத்தை, தாங்கிக் கொள்ளும் தைரியத்தை தா” என்று வேண்டுவது அறிவுடைமை. தெளிவான மனோநிலை வளர்ச்சியின் அடையாளம். திருவள்ளுவர் ஒரு படிமேலே போனார். வாருங்கள் கஷ்டத்தைக் கஷ்டப்படுத்துவோம், என்று கட்சி சேர்க்கிறார். எப்படி? நாம் கஷ்ட்டத்திற்கு கஷ்டப்படாவிட்டால் கஷ்டமே கஷ்டப்படும்

என்கிறார்...ஆஹா!.
" இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாதவர்".
கந்தபுராணத்தில் ஒரு காட்சி. பிரமனை முருகன் சிறையில் அடைக்கிறார். பெயில் (bail) எடுக்கப்போன நந்தி ஃபெயில் (Fail) ஆகிவிடுகிறார். சிவபெருமான் தலையிட்டு விடுதலை கிடைத்தது. ஆலமர் அண்ணல் ஆதங்கத்துடன் பிரமனைக் கேட்கிறார், சிறைச்சாலையில் சிரமப்பட்டீரா?.

பிரமன் சொன்னார் " நான் எனும் ஆணவம் நீங்கியது", ஞானம் பெற்றேன். சிறைச்சாலை அவருக்கு தவச்சாலை ஆனது.!

துன்பங்களுக்குத் துவளக் கூடாது. இக்கட்டுகள் வெற்றியின் படிக்கட்டுக்கள். கடவுளை அடையக் கஷ்டங்கள் ஒரு வழி. துன்பமும் ஞான வீட்டின் திறவு கோல்தான். வாருங்கள்! வள்ளுவர் வழியில் கஷ்டங்கனை கஷ்டப்படுத்துவோம்.

நன்றி: சுகி.சிவம் எழுதிய "ஞானமலர்கள்"

# மௌனம்

காற்றுக்கு இலைகள் அசைகின்றன. மலர்கள் அசைகின்றன. கொடிகள் அசைகின்றன. மரங்கள் கூட அசைகின்றன. ஆனால் மலைகள் அசைவதில்லை.

அசைவது பலவீனத்தைக்காட்டுகிறது. அசையாதது உறுதியைக் காட்டுகிறது.

சளசளவென்று பேசுகிறவன் எவ்வளவு பெரிய கெட்டிக்காரனாக இருந்தாலும், சொற்பொழிவாளனாக இருந்தாலும், தன் பலவீனத்தைக் காட்டிக்கொள்கிறான்.

மௌனி முட்டாளாக இருந்தாலும் பலசாலியாகக் காணப்படுகிறான். "சும்மா இருப்பதே சுகம் என்றார்கள்".
பேசாமல் இருப்பது பெரும் திறமை. பேசும் திறமையைவிட அது மிகப்பெரியது. அதனால்தான் ஞானிகளும் பெரிய மேதைகளும் குறிப்பிட்ட சில காலங்களில் மௌன விரதம் அநுஷ்டிக்கிறார்கள்.
ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்பி, அதைச் சுருக்கமாக தெளிவுபடுத்துகிறவன் பெரிய மரியாதையைப் பெற்று விடுகிறான்.

சிறிய விஷயத்தைக்கூட வளைத்து வளைத்துப் பேசுகிறவன் கேலிக்கு ஆளாகிறான். பயனில்லாத சொற்களைப் பாராட்டுகிறவனை "மக்கட் பதடி' என்றான் வள்ளுவன். "சுருங்கக்கூறி" விளங்க வைத்தல் என்பார்கள்.

ஞானிகள் சில விஷயங்களைக் கூறுகிறார்கள் அவை பொன்மொழிகளாகி விடுகின்றன. பைத்தியக்காரர்கள் பதினாயிரம் பேசுகிறார்கள், அவை சீந்துவாரில்லாமல் போகின்றன.

மௌனம் ஒரு மகத்தான ஞானம். அது தெய்வீகக் கலை. ஒரு குடும்பம். கணவன் மனைவி இருவர். கணவனுக்கு மனைவியிடம் கோபம். ஆனால் அதை வெளியில் சொல்ல விரும்பவில்லை. மனைவியிடம் பேசாமலே இருக்கிறான். அவன் அவளைத் திட்டி இருந்தால், அது சாதாரணமாகவே போயிருக்கும். அவன் பேசாமல் இருப்பதே அவளைச் சித்திரவதை செய்கிறது.

அவன் பேசமாட்டானா, பேசமாட்டானா? என்று எதிர்பார்க்கிறாள். இரவில் நிட்சயமாகப் பேசுவான் என்று நம்புகிறாள். தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுக்கிறாள்.

"நான் என்ன தப்புப் பண்ணினேன்? மெதுவாகக் கேட்கிறாள். நள்ளிரவில் பக்கத்தில் வந்து உட்காருகிறாள். காலைப்பிடித்து விடுகிறாள். அவன் மௌனம் கலையவில்லை. அவன் மௌனம் தொடரத் தொடர, அவள் தாகம் அதிகரிக்கிறது. திடீரென்று ஒரு வார்த்தை அவன் பேசிவிட்டான். அவளுக்கு தெய்வமே கண் திறந்தது போன்று தோன்றுகிறது.

"இன்றைக்கு நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம்!" என்று ஊர் முழுக்கச் சொல்லிக் கொண்டு வந்து விடுகிறாள்.

பத்து வார்த்தை திட்டி, நாலு உதை உதைப்பதைவிட, அந்த மௌனம் மகத்தான சக்தியைப் பெற்றுவிடுகிறது. கோயிலில் இருக்கின்ற சிலை,
வருகின்ற பக்தனிடமெல்லாம் பேசத் தொடங்குமானால், பக்தனுக்கே அலுப்புத் தட்டிவிடும். "கோயிலுக்குப் போனால் அந்தச் சாமி நம்மை விடாதையா! உயிரை வாங்கிவிடும்!" என்று பேசத் தலைப்பட்டு விடுவான். அது மௌனமாக இருக்க இருக்க, பக்தன் பேசுகிறான்: பாடுகிறான்: புலம்புகிறான்.

ஆரவாரங்கள் வெறும் மயக்கங்கள். அரசியல்வாதியின் கூச்சல், வேறு வேலை இல்லாதவனின் புலம்பல். தொண்டைத் தண்ணீரைக் காயவைப்பதில் என்ன லாபம்? இவர் கொஞ்சம் பேசமாட்டாரா? என்று உலகத்தை ஏங்க வைக்க வேண்டும். பேசத் தொடங்கினால் உலகம் கூர்ந்து கேட்க வேண்டும்.

கடலில் ஆழமான பகுதியில் அலை இருக்காது. வெறும் பொட்டல் வெளியில் வீடு கட்டிப்பாருங்கள்: பயங்கரக் காற்றடிக்கும். வெண்மேகம் போகின்ற வேகத்தைவிட, கார்மேகத்தின் வேகம் குறைவு. நாய் ஓடவதைவிட, யானை நடப்பதில் வேகம் அதிகம்.

சலனமற்ற மௌனம், பல அர்த்தங்கள் கொண்டது. மௌனத்தில் எல்லையற்ற அர்த்தங்கள் உண்டு. பேசாமல் இருப்பவனே பெரிய விஷயத்தைச் சொல்பவன். பேசிக்கொண்டிருப்பவன் ஞானக்கிறுக்கன்.

ஏராளமான வரிகளைக் கொண்ட இலக்கியங்களைவிட, ஏழு வார்த்தைகளில் அடங்கிவிட்ட திருக்குறள், உலகத்தைக் கவர்ந்துவிட்டது. காலங்கள் தோறும் துணைக்கு வருகிறது. நிலையான தத்துவத்தைச் சொல்கிறது.

எனது நண்பர் ஒருவர் வாரத்தில் ஒருநாள் மௌன விரதம்: ஒருநாள் உண்ணா விரதம். வயது அறுபதைத் தாண்டுகிறது: ஒரு மாத்திரை கூட அவர் போட்டுக்கொண்டதில்லை. ஆரோக்கியத்திற்கும் மௌனம் மிக அவசியம். தவம் புரிகின்றவன் "ஓம் நமச்சிவாய" என்ற வார்த்தையைக்கூடச் சொல்வதில்லை.

மௌனமாக இருப்பவனுக்கு ஆகாரம் குறைவாக இருந்தால்கூடப்போதும்.
அதிகம் பேசுவதால் அடி வயிறு சூடாகிறது. தீனி அதிகம் கேட்கிறது. அதன் மூலம் உடம்பு பெருத்து விடுகிறது. வாரியார் சுவாமிகள் சாதாரணமான நேரங்களில் பேசுவது மிகக்குறைவு. சொற்பொழிவுகளிலும் அலட்டிக் கொள்ளாமல் பேசுவார். அந்த இரண்டு மணி நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் இரண்டொரு வார்த்தைகள்தான் பேசுவார். அதனால் ஒருவேளைச் சாப்பாடே அவருக்குப் போதுமானதாக இருக்கிறது. குரல் கணீரென்று கம்பீரமாக ஒலிக்கின்றது. நோயற்ற வாழ்விற்கு இலக்கணமாகிறார். காஞ்சிப் பெரியவர்கள் பேசுவது குறைவு. அதனால் உண்பதும் குறைவு. இந்த வயதிலும் எங்கேயும் நடந்து செல்ல அவரால் முடிகிறது.

சில மனிதர்கள் ஆளைப் பிடித்தால் விடமாட்டார்கள். சிலர் ஒலிபெருக்கியைப் பிடித்தால் விடமாட்டார்கள். குடிப்பவர்கள் ஒரே விஷயத்தை திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள். மதுவையும் மங்கையையும் கூட மௌனமாக ரசிப்பதில் உள்ள சுகம், சளசளவென்று பேசுவதில் இல்லை.

நிறையப் பேசுபவன், தன் வார்த்தைகளாலேயே காட்டிக் கொடுக்கப்படுகிறான். அவனைக் கண்டாலே பலரும் ஓட ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட அறுவைகளிடம் இருந்து தப்புவதற்காகவே சித்தர்களும், முக்தர்களும் மலையிலே தங்கிக் கொண்டார்கள்.

காதலில் கூட ஜாடையில் இருக்கின்ற சுகம், வாய் மொழியில் இல்லை.

மனிதர்களைவிட, பல மிருகங்களுக்கு அதிக வயது. அவற்றைவிட மரங்களுக்கு அதிக வயது. அவற்றைவிட மலைகளுக்கு அதிக வயது.
காரணம், அவை பேசாமலும் அதிர்ச்சி அடையாமலும் இருப்பதே.

மௌனத்தின் சக்தியை உணர்ந்துதான் இந்துக்கள் தவம் புரிந்தார்கள். நிஷ்டையில் அமர்ந்தார்கள். மௌன விரதம் மேற்கொண்டார்கள்.

நீண்ட நாள் பேசாமல் இருப்பது என்பது, ஒருவகை நிர்விகல்ப சமாதி. அதை மேற்கொண்டவன் ஞானத்தைத் தேடினால் அவனுக்கு அது கிடைக்கும்.

நன்றி: கவிஞர் கண்ணதாசனின் - அர்த்தமுள்ள இந்துமதம்

# சொர்க்கம் - நரகம் - மறுபிறப்பு

ஒன்பது ஓட்டைக்குள்ளே ஊசலாடிக்கொண்டிருக்கும் ஒரு துளிக் காற்று ஒரு குறிப்பிட்ட தேதியில் வெளியேறுகிறது.

ஆக, அந்தத் தேதியை எவனோ நிர்ணயிக்கிறான் என்றுதானே ஆகிறது.
அப்படித் தேதியை நிர்ணயிக்க ஒருவன் இருப்பானானால், மனித உயிருக்கு நீதியையும் அவன் நிர்ணயிப்பான் அல்லவா?

தவறு செய்தவர்கள் நரகத்திற்குப் போகும்படியும், நல்லது செய்தவர்கள் சொர்க்கத்திற்குப் போகும்படியும் அவன் நிர்ணயிக்கலாம் அல்லவா?

சொர்க்க - நரக அமைப்பு, அதன் இருப்பிடம் பற்றி வேண்டுமானால் சர்ச்சை இருக்கலாம். ஆண்டவன்தான் நீதி வழங்குகிறான் என்பதில், விவாதத்துக்கே இடமில்லையே!

இதோ காஞ்சிப் பெரியவர் பேசுகிறார்:

"மற்ற மதங்களில் இல்லாத பல அம்சங்கள் நம் மதத்தில் உண்டு. அதில் கர்ம கொள்கை (Karma Theory) என்று ஒன்று சொல்கிறார்கள். நம் மதத்தில் இருந்து வந்த பௌத்தம் போன்ற மதங்கள் இதை ஒப்புக்கொண்டாலும், ஏனைய மதங்களில் இந்தக் கொள்கை இல்லை.

கர்மக் கொள்கை(Karma Theory) என்றால் என்ன?

எந்தச் செயலுக்கும் பிரதியாக ஒரு விளைவு உண்டு. காரணமும் விளைவும் (Cause and effect) என்றும், நடவடிக்கையும் அதன் எதிர் நடவடிக்கையும் (action and reaction) என்றும், இவை தவிர்க்க முடியாத விதிகளாக இருக்கின்றன என்றும் பௌதிகவியல் கூறுகிறது. பௌதிகத்தில் சொல்வதையே மனித வாழ்க்கைக்குப் பொருத்தி கர்மக் கொள்கையை நம் ஆன்றோர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்சத்தில் ஜடமான பூதங்கள் போலவே சைதன்யம் என்ற அறிவுள்ள சீவன்களும் அடக்கம். இவை ஒன்று சேர்ந்ததுதான் உலக வாழ்வு. எனவே ஒன்றுக்கு இருக்கும் நியதி, தர்மம் இன்னொன்றுக்கும் இருக்கத்தான் வேண்டும். மனிதனின் ஒவ்வொரு கர்மாவுக்கும் (செயலுக்கும்) விளைவாக ஒரு பலன் உருவாகித்தான் தீரவேண்டும் என்பதே கர்ம கொள்கை(Karma Theory) யாகும். பாப கர்மங்களை மனிதன் செய்தால் அதற்கான தண்டனையை மனிதன் அனுபவிக்க வேண்டும். புண்ணிய கர்மம் செய்தால் அதற்கான நற்பலன் அவனை வந்தடையும் என்கிறது எமது இந்து மதம்.

இம்மாதிரி பாப, புண்ணியக் கர்மங்களை மனிதன் அனுபவிக்க வேண்டும் என்பதாலேயே அவனுக்கும் பல பிறவிகள் உண்டாகின்றன என்கிறது நமது மதம். நல்லது செய்யவேண்டும், கெட்டது செய்யக்கூடாது என்பதை சகல மதங்களும்

சொன்னாலும், அவை நம் மதம் மாதிரி இத்தனை அழுத்தம் கொடுத்து, காரணம் விளைவு(Cause and effect) தொடர்பைச் சொல்லவில்லை.
மறுபிறப்புக் கொள்கையை (reincarnation theory) மற்ற மதங்கள் - பாரத தேசத்தில் தோன்றாத மற்ற மதங்களில் எதுவுமே சொல்லவில்லை.

நன்றி: அர்த்தமுள்ள இந்துமதம்

# மனப்பயிற்சி - யோகம்

## மனம் என்றால் என்ன?

நமது உடல் நன்றாக இருக்க வேண்டுமானால் உடற்பயிற்சி அவசியமாகும். அதேபோல மனதை ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் வைத்திருக்க வேண்டுமானால், மனப்பயிற்சி அவசியமாகின்றது. உடலை எமது கண்ணால் பார்க்கின்றோம். ஆனால் மனதைப் பார்க்க முடியுமா? மனம் என்றால் என்ன? மனிதன் தான் மனமா? அல்லது மனம்தான் மனிதனா?

மனிதனில் உடலும், உயிரும் இருக்கின்றது. உடலை மட்டும் மனிதன் என்று சொல்ல முடியாது. ஏனெனில் உயிர் உடலை விட்டுப் பிரிந்தவுடன் உடலுக்கு வேறு பெயரைக் குறிப்பிடுகின்றோம்.
"இப்போ மனம் என்றால் என்ன?" என்ற கேள்விக்கு வருவோம். மனம் என்பது உயிரும், உடலும் சேரும் போது உருவாகும் ஒரு இயக்கமாகும். இந்த மன இயக்கத்தின் தன்மையை வைத்தே ஒருவரின் குணத்தை மதிப்பிடுகின்றோம். ஆகவே மனிதன் உயர வேண்டுமானால், அவனது மனத்தை நெறிப்படுத்த வேணடும். அதாவது தூய்மைப் படுத்த வேண்டும்.

மனதை எப்படி தூய்மைப் படுத்தலாம்? என்ற கேள்வி எழுகின்றது. மனம்தான் ஒரு நிலையில் இருப்பதில்லையே! எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிறது. நாங்கள் எப்போது மனதைக் கட்டுப்படுத்த நினைக்கிறோமோ, அப்பொழுது அது வேகமாக ஓடுகின்றது. இதை ஞானிகளும், துறவிகளும் மிக அழகாகக் கூறுவார்கள். "மனதை அடக்க நினைத்தால் அலையும், அறிய நினைத்தால் அடங்கும்" என்று.

## மனத்தை எப்படி அடக்கலாம்?

நமது அடுத்த கேள்வி "மனதை எப்படி அடக்கலாம்?" எப்பொழுது நமது மனத்தையே, மனம் என்றால் என்ன? என்ற கேள்வியை கேட்கத்

தொடங்குகிறோமோ, அப்பொழுதிலிருந்தே மனம் தானாகவே அமைதி நிலைக்கு வரத்தொடங்குகிறது. கேள்வி கேட்ட உடனேயே மனம் அடங்குவது என்பது அவ்வளவு சுலபம் அல்ல. அதற்குத் தகுந்த பயிற்சி
வேண்டும். எப்படி இந்தப் பயிற்சியை தொடங்குவது? முதலில் நாம் கேட்க வேண்டியது, "இந்த மனம் ஏன் ஓடுகின்றது: அல்லது அலைகின்றது?" என்ற கேள்வி. நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் உருவாவதற்கு காரணம் எண்ணம். நாம் ஒரு நல்ல செயலையோ, தீய செயலையோ செய்வதற்கு முன்பு அச்செயல் நமது மனதில் எண்ணமாக உருவாகிறது. அடுத்த கேள்வி, இந்த எண்ணம் எப்படி உருவாகிறது. நாம் பிறந்த நாளிலிருந்து உருவாகிய எண்ணங்களும், அனுபவங்களும் எமது மனதிலே பதியப்படுகின்றன. இந்தப் பதிவுகள் சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, திரும்பவும் எண்ணமாக வந்து, செயலாகப் பிரதிபலிக்கின்றது. அத்துடன் புதிய எண்ணங்களும் உருவாகின்றன. இவை மட்டும்தான் எமது மனதில் பதியப்பட்டிருக்கவில்லை. இதைவிட இன்னொன்றும் எமது மனதில் பதியப்பட்டிருக்கிறது. இதை "கருவறைப்பதிவு" என்று சொல்லுவார்கள்.
அதைத்தான் "முற்பிறவிப் பயன்" என்றும் சொல்லுவார்கள். இது நாம் எத்தனை பிறவிகள் எடுத்தோம், அவை ஒவ்வொன்றிலும் நாம் எண்ணிய எண்ணங்கள், அதன் பிரதிபலிப்பான செயல்கள் யாவும் பதியப்பட்டிருந்து, தற்போது எங்களை அறியாமலே இந்தப் பிறவியில் எண்ணங்களாகப் பிரதிபலிக்கின்றது. ஆகவே மனிதனின் தன்மை மேற்கூறிய இரண்டு கர்மவினைப் பலன்களால் நிர்ணயிக்கப்படுகின்றது.

நாம் இப்போது ஓரளவிற்கு எங்கிருந்து எண்ணங்கள் உருவாகுகின்றன_என்பதை அறிந்து கொண்டோம். அதாவது நமது உடலிலே சக்தி ஏற்படும்போது, எண்ணங்கள் உருவாகுகின்றன. இந்த எண்ணங்களை நெறிப்படுத்த, நமக்கு இப்போது பயிற்சி தேவைப்படுகின்றது. அந்தப் பயிற்சியைத்தான் "யோகம்" என்று நம் முன்னோர்கள் சொல்லிவைத்தார்கள்.

யோகப்பயிற்சியை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.
1. பிரத்யாகாரா 2. தாரணா 3. தியானம் 4. சமாதி

பிரத்தியாகாரா:
இதுவரையில் செய்த காரியங்களினால் ஓடுகின்ற மனதை அதன் வழியே செல்ல விடாமல், வேறு வழிக்கு மாற்றுவது. உதாரணமாக, ஒரு செயலினால் ஏற்பட்ட பாதிப்பை, திரும்பவும் திரும்பவும் சிந்திக்காமல் வேறு திசைக்கு எண்ணத்தை மாற்றுவது.

தாரணா:
தாரணா என்பதன் ஆங்கிலப் பதம் concentration என்பதாகும். அதாவது ஒரு பொருளிலோ அல்லது செயலிலோ மனதை ஒரு நிலைப்படுத்துவது.

தியானம்:
"மனம் எங்கிருந்து புறப்பட்டதோ, அதை திரும்பவும் அதே இடத்திற்கு கொண்டு செல்லப் பழகிக்கொள்வது" என்பது தியானத்திற்கான வரைவிலக்கணமாகும்.

இதற்கு புலன்களை அடக்கிப் பழகிக்கொள்ள வேண்டும்.

சமாதி:
சமாதி என்பது இறைநிலைக்கு தனது மனதை செலுத்தி, எல்லாவற்றிற்கும் மேலான மெய்ப் பொருளுடன் இணைந்து, அதுவாகவே மாறுவது. அதாவது இறைவனுடன் சங்கமிப்பது.

ஆக்கம்: திரு. மாணிக்கம். செந்திவேல்

**பாவத்தின் அளவுக்கே.......**

ஒரு அரண்மனை. அதன் மேன்மாடத்திலே ஒரு ராஜா. அவர் பக்கத்திலே அழகான ராணி. இருவரும் பழங்களை உரித்துத் தின்றபடி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.
சுளைகளைத் தின்றுவிட்டு தோல்களை வெளியே எறிகிறார்கள்.
ஒரு சந்நியாசி. அவனுக்கோ பசி. வெளித்திண்ணையில் அவன் உட்கார்ந்திருக்கிறான். ராஜா தூக்கி எறிந்த தோல்களை எடுத்து அவன் தின்கிறான். சேவகர்கள் பார்க்கிறார்கள். சந்நியாசியை இழுத்துக் கொண்டுபோய் ராஜா முன்னால் நிறுத்துகிறார்கள்.
அவனைச் சவுக்கால் அடிக்கும்படி ராஜா ஆணையிடுகிறான். அடி விழ, அடி விழ சந்நியாசி சிரிக்கிறான். "ஏன் சிரிக்கிறாய்?" என்று ராஜா கேட்கிறான்.
"அரசே! தோலைத் தின்றவனுக்கே இவ்வளவு அடி என்றால், சுளையைத் தின்றவனுக்கு எவ்வளவு அடி என்று எண்ணிப்பார்த்தேன். சிரிப்பு வந்துவிட்டது" என்றான் சந்நியாசி.

பாவத்தின் அளவுக்கே தண்டனை என்பதற்கு இதைவிடவா வேறு கதை வேண்டும்.

அறிவுக்கு விருந்து

அறம் எனும் நீரில் நீராடி, வாய்மை என்னும் வாசனைத் திரவியத்தை உடலில் பூசு. அப்போது உன் முகம் பேரொளியுடன் திகழும். கொடுக்கும் தெய்வம் உன்மேல் ஆயிரக்கணக்கான அன்பளிப்புக்களை அள்ளிக் கொடுக்கும்.

சகதி நிறைந்த நீர்மேல் நிமிர்ந்து நிற்கும் தாமரை போலவோ, நீரினால் பாதிக்கப்படமுடியாத, இறக்கைகளுடன் காற்றிலே உயரப் பறக்கும் கடற் பறவை போலவோ இவ்வுலகில் நீங்கள் வாழ்க்கை நடாத்துங்கள்.

பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை, திருப்தியினும் உயர்ந்த இன்பமில்லை, ஆசையிலும் பெரிய தீமையில்லை, கருணையிலும் பெரிய அறமில்லை, மன்னித்தலைவிட ஆற்றல்மிக்க ஆயுதமில்லை.

- குரு நானக்.

எங்கள் குலகுரு, சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அருளிய நூலில் இருந்து சில அருள் வார்த்தைகள்.......

## "தன்னை உணருதல்"

1. நான் யார்? எங்கிருந்து வந்தேன்?
நாம் என்பது எமது உடல், மனம் அல்லது மனவெழிச்சியோ அல்ல. நாம் என்றும் அழியாத, ஆன்மீகப்பாதையில் பிரயாணம் செய்கின்ற ஆன்மாக்கள்.நாம் கடவுளிடமிருந்து வந்தவர்கள். கடவுளுடன் இருந்து, அவரோடு ஒன்றிணைந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

2. நான் எங்கே செல்கிறேன்? எனது பாதை எது?
நாம் எல்லோரும் கடவுளை அடைவதற்கு பரிணாம வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம். நாங்கள் அனுபவத்தால் அறிவை வளர்க்கிறோம். அனுபவம் தான் எங்கள் பாதை. அனுபவம் எங்களை, கோபப்படாமை, சண்டைப்படாமை, பயமின்மை போன்றவற்றைக் கற்பிக்கிறது. ஒரு நாள் நாம் கடவுளோடு சங்கமிப்பதை அனுபவிப்போம்.

3. சிவனோடு நடனம் ஆடுவது என்பது யாது?
முழுப்பிரபஞ்சமும் அசைவிலும், மாற்றத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.
இந்த ஒழுங்கான அசைவின் பிரதிபலிப்புக்களே சிவனின் நடனமாகும். நாங்களும் சிவனின் நடனத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம். நாங்கள் சிவனோடு நடனமாடிக் கொண்டிருக்கிறோம். அவர் எங்களோடு நடனமாடிக் கொண்டிருக்கிறார்.

4. நாம் எப்படி சிவனோடு நடனமாடக் கற்றுக் கொள்ளலாம்?
நடனம் என்பது அசைவு. கட்டுப்பாடான நடனம்தான் மேன்மையானது. இந்துக்களின் ஆன்மீகப்பாதை: அதாவது தன்னை உணருதல், பக்தி, தியானம், யோகம் போன்றவை கட்டுப்பாடான நடனங்களாகும். இவை எங்களை கடவுளோடு அண்மைப்படுத்துகின்றது.

5. பூமியில் வாழ்வதற்கான அர்த்தம் யாது?
பூமியில் வாழ்வதன் அர்த்தம் ஒருவர் தன்னைத்தானே உணருவதாகும். ஒவ்வொரு ஆன்மாவும், ஆழ்ந்த தியானத்தில் இருக்கும்போது தனது உண்மையான, தூய நிலையை அறியக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலை நேரம், உருவம், பருமன், வெளி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நிலையில் இருக்கும் இறைவன், தனக்குள் இருப்பதை உணருவதாகும்.

தமிழ் வடிவம்: திரு. மாணிக்கம் செந்திவேல்.

# தமிழ்த் தாய் மண்ணே வணக்கம்!
(தொடர்ச்சி)

திராவிட இனங்களில் கடம்பர், வில்லவர், மீனவர், எயினர், ஒளியர், தோடர், மறவர், மாறர், கோசர், குறும்பர், கங்கர், வானரர். வானவர் போன்ற பிரிவினரும், அவர்களுக்கெனத் தனிக் கொடிகளும் இருந்தன. குமரிநாடு கடலாற் கொள்ளப்பட்டபோது, அங்கிருந்த மக்கள் பலர், வட இந்தியாவுக்கும், சிலர் தென் இந்தியாவிலும் குடியேறினர். அவர்களில், பிராகுலியர், ஆந்தரர், கோடர், தோடர். கோண்டர், நாகர், துருவர், கருநாடர், மலையாளர், வேளீர், கந்தருவர் என்போர் முக்கியமானவர்கள்.

பண்டைக்காலத்தில் வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும், ஈழத்திலும் வாழ்ந்த மக்கள் திராவிடர்களே. இவர்கள் கிழக்கிந்தியத் தீவுகள் தொடக்கம், அமெரிக்கா வரையும், நடுநிலக் கடலக நாடுகளிற் செறிந்திருந்தனர் இந்நாடுகளின் பழைய நாகரிகங்களும், வழிபாடுகளும், கலைகளும் இதனை நிரூபிக்கின்றன. இந்நாடுகளில் வழங்கிய எழுத்துக்களினதும், தமிழ் எழுத்துக்களினதும் உற்பத்தி ஒன்றெனப் பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

பண்டைக்காலத்தில் நடுநிலக் கடலக மக்களின் வழிபாடுகள் திராவிடரின் வழிபாடுகளாகும். இன்று இவை வேறு நாடுகளில் அழிந்து, குறைந்த போதிலும், இந்தியாவிலும், ஈழத்திலும் நிலைபெற்றிருக்கின்றன. ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னரே இந்தியக் கண்டத்தில், பெருந்தொகையினராகப் பரவி இருந்தவர்கள் திராவிடத் தமிழர்களே. இவர்களே இந்தியாவின் பூர்வீகக் குடிகள் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். அவர்கள் தென்னகத்தில் மிகவும் செல்வாக்கோடும், கலை, கலாச்சாரத்தோடும் வாழ்ந்து வந்தனர். குமரி முனைக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்களின் நிலப்பகுதிகள், மக்கள் வாழ்விற்குகந்த நிலையை முதற்கண் அடைந்தன. அங்கு மக்கள் வாழ்ந்து வளர்ந்து நாகரிகத்திற்கு வித்திட்டனர்.

(தொடரும்) ஆக்கம்: க.கு.

# சிறுவர் மஞ்சரி

## என்னுடைய நாய்.

என்னுடைய நாயின் பெயர் லிண்டா. நாய் நன்றியுள்ள மிருகம். லிண்டாவின் நிறம் வெள்ளை. லிண்டாவின் கண் நீல நிறம். அதற்கு இரண்டு வயது. லிண்டா என்னைக் கண்டால் வாலை ஆட்டும். லிண்டா என்னுடன் மாலை நேரங்களில் பந்து விளையாடும். நான் கோடை காலங்களில் அரை மணி நேரம் லிண்டாவுடன் நடப்பேன். லிண்டாவிற்கு இறைச்சி சாப்பிட விருப்பம். லிண்டாவிற்கு பூனையைக் கண்டால் பிடிக்காது. லிண்டாவின் சிநேகிதி பெயர் றோசி. இது தான் எனது செல்லப் பிராணி

விதுஷா. லோகன்
முதலாம் ஆண்டு மாணவி
துர்க்காதேவி இந்து தேவஸ்தான சமய, தமிழ் பாடசாலை

## "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வுலகில் எம்மைப் பெற்று, அனைத்தையும் தந்து, அன்புடன் வளர்ப்பவர்கள் எமது தாயும் தந்தையுமாவர் நமது தாய் பத்து மாதம் சுமந்து, பல்வேறு கஸ்டங்களையும் தாங்கி எம்மைப் பெறுகிறாள். எமக்குப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கிறாள். எமக்கு நோய் ஏற்படும் போதெல்லாம், தான் மருந்து உண்டு எம்மைக் காக்கிறாள். அல்லும் பகலும் கண்ணை இமை காப்பதுபோல எம்மைக் காத்து வளர்க்கிறாள்.
நமது பிதா நமக்கு உணவு, உடை, கல்வி அனைத்தும் அளித்திட அயராது உழைக்கிறார். நாம் வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்லவர்களாக, பயனுள்ளவர்களாக வாழவேண்டும் என்று விரும்புகிறார். நமது கண்கண்ட தெய்வங்களாக அன்னையும் பிதாவும் விளங்குகின்றனர். அவர்களை என்றும் நாம் மதித்துப் போற்ற வேண்டும். "தந்தை தாய் பேண்" என்ற பொன் மொழியை நாம் மறக்கக் கூடாது. நமது தந்தை தாய் கூறும் புத்திமதிகளைக் கேட்டு அதன்படி நாம் நடக்க வேண்டும். வயோதிப காலத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை நாம் மனம் கோணாது செய்ய வேண்டும். அவர்களது தேவைகளை அறிந்து உதவ வேண்டும். அவர்களது விருப்பங்களை நாம் நிறைவேற்ற வேண்டும். அன்பும் ஆதரவும் காட்டவேண்டும்.
நாம் முதன் முதலாக அறிந்து கொண்ட தெய்வங்களான அன்னையையும் பிதாவையும் எந்நாளும் போற்றி வாழ முற்படவேண்டும். அவர்களது ஆசியினால் எமது வாழ்வு சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

சுஷாந்தி தர்மவரதன்
ஆறாம் ஆண்டு மாணவி
துர்க்காதேவி இந்து தேவஸ்தான சமய, தமிழ் பாடசாலை.

## அறிவுக்கு விருந்து

பொருளின் மீதுள்ள பேராசையை விடவேண்டும். உழைப்பால் அடைந்ததையே வைத்துக்கொண்டு திருப்தி அடையவேண்டும்.

ஜடைதரித்தல், முழுமொட்டை அடித்தல், காவியுடை அணிதல் - இவ்வேடங்களினால் மட்டும் யாதொரு பயனும் ஏற்படப்போவதில்லை. பரமாத்மாவின் தத்துவங்களைச் செயலாக்கி வராதவன், இவ்வேடங்களைப் போலித்தனமாவே கைக்கொள்ளும் மூடனாகிறான்.

ஞானம் ஒன்றே வீடுபேற்றிற்குரிய நேரான வழி. நெருப்பில்லாமல் சமைக்கமுடியாது. அதைப் போலவே, ஞானமின்றி விடுதலை கிடையாது.

தேவியை மனதில் எண்ணித் துதிக்க வேண்டும். அச்சம் என்னும் பஞ்சுத் தொகுதியைப் பொசுக்கும் அக்கினிச் சுவாலை அவள். அச்சம் என்னும் பாம்புக்குக் கீரி போன்று அவள் இருப்பாள். தன்னைத் துதிப்போரின மரணத் துன்பங்களைப் போக்கும் இயல்புடையவள் அவள்.

- ஆதி சங்கரர்

பணிவுடன் பழகாதவனும், நாணத்தகும் செயல்களினின்று விலகிக் கொள்ளாதவனும் உண்மையான மனிதனாகமாட்டான்.

பேராசை வறுமையைக் குறிக்கின்றது. அவாவின்மை செல்வத்தைக் குறிக்கின்றது.

முதியோருக்கு மரியாதை செலுத்துதல் இறைவனுக்கு மரியாதை செலுத்துவதாகும்.

- நபிகள் நாயகம்.

தொகுப்பு: இணுவைக் குமரன்.

## எது உண்மை

கோசல தேசத்தில் தேவதத்தன் என்ற வேதியன் மக்கட்பேறு இல்லாதவனாய் புத்திராமேடி என்ற யாகத்தை செய்ய விரும்பினான். அந்த வேள்வியால் புதல்வன் கிடைப்பான் என்ற பூரண நம்பிக்கையுடன் தேவதத்தன் நர்மதாநதி தீரத்தில் வேள்விச்சாலை மண்டபம் ஒன்றை அழகாக அமைத்துக் கொண்டான். மறைகளை நன்கு கற்றறிந்த அந்தணர்களின் உதவியால் வேள்வி செய்யத் தொடங்கினான்.

இந்த வேள்வியில் சாமகானம் செய்து கொண்டிருந்த கோபிலர் என்பவர் மூச்சை ஒழுங்குபடுத்தி ஏழுசுரங்களோடு கூடிய சாமவேதப் பகுதியைக் கானம் செய்யாமல் அடிக்கடி மூச்சைவிட்டு சுரபங்கமாகத் தம் கடமையைச் செய்து வந்தார். அது

கண்ட தேவதத்தன் கோபிலரை நோக்கி “ஏன் இப்படி உஸ் உஸ் என்று மூச்சு விடுகிறீர்? இசைக்குறைவுடன் இப்படியா சாமகானம் செய்வது? இது என்ன மூடத்தனம்?” என்று கோபித்துக்கொண்டான். கோபிலருக்கு கோபம் வந்துவிட்டது.

கோபிலர் சொன்னார். “சிறிது தளர்ந்திருக்கும் என் உடல்நிலை காரணமாக ஏற்பட்ட இந்தக் குறைக்காக நீ என்னைப் பிரமாதமாய் கண்டித்தது மட்டுமன்றி மூடன் என்றும் ஒரு பட்டம் சூட்டிவிட்டாய்!. இந்த வேள்வியின் பயனாக உனக்குப் பிறக்கப்போகின்ற புதல்வன் மூடனாகவே இருப்பான்!.கோபம் மேலும் பொங்க மூடனாக இருப்பதுடன் முரடனாகவும் வளர்வான். ஏன் ஊமைபோலத்தான் வாழப் போகிறான்?” என்றெல்லாம் மட மடவென்று பேசித் தீர்த்துவிட்டார். கோபிலர் முனிவர் ஆகையால் அந்த வார்த்தையே சாபமாகிப் பலித்துவிடுமோ என்று பயந்தான் தேவதத்தன்.

தேவதத்தன் கோபிலரை நோக்கி “பிறரை துன்பமுறச் செய்வது அருளுடையதாகுமா? என்னுடைய சிறு குற்றத்திற்கு இவ்வளவு பெரிய சாபமா? ஏற்கனவே பிள்ளையில்லாதவனாய் துயரத்தில் மூழ்கிக் கிடக்கும் எனக்கு மேலும் துக்கத்தை அதிகரிக்கச் செய்கிறீர். மூடபுத்திரன் உடையவனும் புத்திரப்பேறு இல்லாதவன் என்றல்லவா அறிஞர்கள் சொல்லுகிறார்கள். மூடப்பிள்ளை தான் பிறக்கும் என்கிறீர். அப்படி ஒரு பிள்ளை கிடைத்தால் தான் என்ன? கிடைக்காமல் போனால் தான் என்ன? என்று மனம் நொந்து கொண்டான். சாபம் கொடுத்தவருக்கு அனுக்கிரக வார்த்தை ஒன்று சொல்லத் தெரியாமலா போகும் என்று எண்ணினான்.
கோபிலர் கருணை கூர்ந்து தேவதத்தனை நோக்கினார். பெரியோர்களுக்கு கோபம் வந்தாலும் அது நீர் மேல் குமிழிதான்!. “இனி நீ துயரப்படாதே! என்னுடைய சாபத்தால் மூடனாய் பிறக்கப்போகிறவன் பின்னாளில் நல்ல வித்துவான் ஆவான் என்று இதோ அனுக்கிரகம் செய்கிறேன்” என்றார். தேவதத்தன் ஆறுதலடைந்தான். வேள்வி பூர்த்தியான பின் தன் பொருள்களையெல்லாம் வாரி வழங்கினான். தேவதத்தனின் மனைவி ரோகிணி ஒரு புதல்வனை பெற்றாள். குழந்தைக்கு உதத்தியன் என்று பெயரிட்டனர்.

உதத்தியன் மூடனாகவும் முரடனாகவுமே வளர்ந்தான். கல்வியில் உள்ளம் சிறிது ஈடுபடவும் இல்லை. தந்தை எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தும் பயன்படவில்லை. உற்றார் உறவினர் சிரித்தார்கள். சிலர் நிந்தித்தார்கள். வேறு சிலர் பயமுறுத்தினார்கள். உதத்தியா என்று கூப்பிடுவதற்குப் பதிலாக மூடா, முரடா என்றே கூப்பிட்டார்கள்.
பையன் வீட்டைவிட்டுக் கிளம்பினான். கங்கையாற்றங் கரையிலே ஒரு காட்டுப்பகுதியில் பர்ணாசாலை ஒன்று அமைத்துக் கொண்டான். பழம் கிழங்கு முதலியவற்றையே உணவாகக் கொண்டான். ஒரே முரட்டுப் பிடிவாதமாக “நான் பொய் சொல்லமாட்டேன்” என்பதை விரதமாக்கி நியமமாகச் செய்து கொண்டான்.

இந்த ஒரே விரதம் தான் உதித்தியன் மேற்கொண்டது. வேறு விரதம் ஒன்றும் கிடையாது. பூஜை கிடையாது. ஜபங்களும் கிடையாது. கங்கையில் நீராடுவவதைக்கூட ஒரு நியமமாகக் கொண்டிருக்கவில்லை. பசித்ததும் கிடைத்த காய்கனிவகைகளையும் உண்ணவேண்டும் என்பதையும் உண்டபின் உறங்கவேண்டும் என்பதையுமே தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தான்.
காட்டு வேடர்களோ வழிப்போக்கர்களோ அந்த வழியாக வருவார்கள் போவார்கள்.

யார் என்ன கேட்டாலும் பொய் மட்டும் சொல்லமாட்டான். முரட்டுத்தனமாகப் பதில் சொன்னாலும் சொன்னது உண்மையாகத் தான் இருக்கும். "உன் பெயர் என்ன? " என்று கேட்டால் ஊமைபோல் சும்மா இருந்துவிடுவான். அநாவசியமான கேள்விக்களுக்குப் பதில் சொல்வதும் இல்லை. ஏதாவது ஒரு பெயரைச் சொல்லி அழைக்கவேண்டுமே என்று யாத்திரிகர்களும் பிறரும் சத்தியவிரதன் என்று குறிப்பிட்டார்கள்.

யாத்திரிகர்களின் பழக்கத்தால் முரட்டுச்சுபாவம் நாளடைவில் தேய்ந்து வந்தது. 'அவர்களைப் போல் நான் இல்லையே! என்ற உணர்வும் மெல்லப் பிறந்தது. "ஏதோ ஒரு காட்டு விலங்கைப் போலல்லவா திரிந்து கொண்டிருக்கிறோம்! என்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. மிருகம் போல உண்பதும் உறங்குவதுமாக இருக்கிறோமே! காட்டு ஜீவனம் மூடப்பிழைப்பு என்று கூடத் தோன்றலாயிற்று. "இந்தப் பிழைப்பும் ஒரு பிழைப்பாகுமா என்ற கேள்வியும் உள்ளத்தில் அடிக்கடி தோன்றலாயிற்று. மரணம் அடைவது தான் என்னைப் போன்றவர்களுக்கு நன்மை என்றும் எண்ணத் தொடங்கினான்.

அந்தக் காட்டிலே நன்றாகத் தழைத்திருந்தும் பழம் கொடாத மரம் ஒன்றைக் கண்டுவிட்டால் "இது என்னைப் போல இருக்கிறதே என்று சத்தியவிரதன் எண்ணத்தொடங்கினான். மூடத்துவம் என்ற நோய் தன்னிடம் இருப்பதாக உணர்ந்து கொண்டதுமே தன்னை அறியாமலே அந்த நோய்க்கு மருந்து தேடவும் உள்ளம் சித்தமாகிவிட்டது.

ஒருநாள் உறங்கி விழித்துக் கொண்டபின் தன்னுடைய நிலமையை உள்ளத்துக்குள்ளேயே தர்க்கித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பன்றி வேடன் ஒருவனின் அம்பினால் அடிபட்டு நடப்பதற்கும் சக்தியில்லாமல் சத்தியவிரதன் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தது. அப்பால் போக சக்தியற்று வீழ்ந்துவிட்டது. அந்தப் பிராணியைச் சத்தியவிரதன் கூர்ந்து கவனித்தான்.

நெஞ்சுஉருகியது. கண்களில் நீர் அரும்பியது. ஆ! ஆ! இந்தப் பன்றி என்ன நடுக்கம் நடுங்குகிறது. ஊதிரம் எப்படி பெருகுகிறது. உடம்பெல்லாம் இரத்தமயமாக எவ்வளவு வேகமாய் ஓடி வந்தது என்ற எண்ணங்கள் எழுந்தன. பன்றியின் நடுக்கம் இந்த முரடனுடைய உடம்பையும் நடுங்கச் செய்தது. இந்தப் பிராணிக்கு காட்டுமூலிகை கொண்டு வந்து ஏதாவது வைத்தியம் செய்யலாமா? இதன் கஷ்டத்தை எப்படி போக்கலாம்" இந்த எண்ணத்தில் வழக்கமாக மந்தமாய் இருந்த மூளையும் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கியது. அந்தப் பன்றி அருகிலுள்ள ஒரு புதருக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. கணத்துக்குள் அதை வேட்டையாடிப் புண்படுத்திய வேடன் தன் இரையைத் தேடிக்கொண்டு காலனைப்போல் அங்கே வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்ததும் சத்தியவிரதன் நான் மூடன் என்றால் இவன் மகாமூடன் என்று தீர்மானித்தான்.

அந்த வேடனை அடிக்கடி பார்த்திருக்கிறான் சத்தியவிரதன். சத்தியவிரதனையும் வேடன் தெரிந்து கொண்டிருந்தான். பொய் சொல்லமாட்டான் இவன் என்பதை வேடன் நன்கு அறிந்திருந்தான். "ஐயா ஒரு கணத்துக்கு முன் இந்த வழியாக வந்த என்னுடைய பன்றி எந்த வழியாக போயிற்று?" என்று கேட்டான். சத்தியவிரதன் பதில் சொல்லாது மௌன விரதம் பூண்டவனாக இருந்துவிட்டான்.

மறுபடியும் வேடன் சத்தியவிரதனை நோக்கி " சுவாமி நீர் பொய் சொல்ல மாட்டீர் என்பதை நான் அறிவேன். என்னுடைய குடும்பம் பசியால் துடித்துக்

கொண்டிருக்குமே! அதைக் காப்பாற்ற வேண்டியது எனது கடமையல்லவா? பன்றி போன இடம் உமக்கு நிச்சயமாகத் தெரிந்து இருக்கும். ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். எங்கே என்னுடைய பன்றி என்று கேட்டான். சத்தியவிரதன் இதற்கும் பதில் சொல்லவில்லை. "என்னுடைய பன்றி என்கிறானே? இந்த உடமை எப்படி வந்தது இவனுக்கு? என்று மூளை ஆராயத்தொடங்கிவிட்டது. வேடன் தொடர்ந்து பேசினான். என்னுடைய அம்பினால் அடிபட்டு வந்த பன்றி எங்கே? என்று மறுபடியும் கேட்டான். ஓஹோ! அம்பு தான் பன்றியை உடமையாக்கி உரிமை கொடுத்துவிட்டதோ என்று அலசத்தொடங்கியது மூளை.

திடீரென்று 'அம்பு உரிமை தரமுடியாது. அன்பு தான் உரிமை அளிக்கவல்லது. என்று துணிந்தான் சத்தியவிரதன். உடனே வாய் திறந்து அந்தப் பன்றி உன்னுடையதல்ல. அது என்னுடையது. அம்பு தரும் உரிமைகுறித்தும், அன்பு தரும் உரிமை குறித்தும் ஏதேதோ சொல்லத் தொடங்கினான். வேடனுக்கு ஒன்றும் புரியவில்லை. "நீ என்னைக் காட்டிலும் மகா மூடன் என்றான் சத்தியவிரதன். பசியால் தவித்துக் கொண்டிருக்கிறது என் குடும்பம். சீக்கிரம் பன்றி இருக்கும் இடத்தை சொல்லிவிடுங்கள். எங்களுக்குப் பிழைக்க வேறு வழிதெரியாது. நான் பொய் சொல்லவில்லை. சத்தியவிரதரே! உம்முடைய தயவைத்தான் இப்போ எதிர்பார்க்கிறேன்" என்று வேடன் நெருங்கி வந்து பேசினான். இவனுடைய நிலையும் பரிதாபமாகவே தோன்றியது சத்தியவிரதனுக்கு... எனினும் கொலைத் தொழில் ஒருவனுக்கு தொழிலாக இருக்கலாமா? என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

வேடனோ 'உண்மையைச் சொல்லிவிடும் சத்தியவிரதரே! இல்லாவிட்டால் நீர் எப்படி சத்தியவிரதராய் இருக்கமுடியும்? என்று நெருக்கினான். சத்தியவிரதனோ "பன்றி இதோ இருக்கிறது என்று காட்டிக் கொடுக்கலாமா என்று குழம்பிக் கொண்டிருந்தான். எது மெய்? எது பொய்? ஏன்ற ஆராய்ச்சியில் உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது எதுவோ அதுவே அஹிம்சை மட்டுமன்று. அதுவே மெய்மையும் என்று தோன்றியது. அஹிம்சை வேறு. சத்தியம் வேறு என்பது உண்மையல்ல என்று எண்ணினான். சத்தியமும் அஹிம்சையும் இரண்டல்ல ஒன்றே எனத் துணிந்தான். ஆனால் "பன்றியைக் காட்டிக் கொடுக்காமல் இருக்கும்போது வேடனுக்கு ஹிம்சை செய்தவனாக மாட்டேனா? என்ற ஐயவினாவும் உள்ளத்தில் எழுந்தது. சத்தியவிரதன் தன்னை அறியாமலே கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்து விட்டான்.

கண்கள் மூடியிருந்தும் ஏதோ ஒரு கண் திறந்து இருப்பது போலத் தோன்றியது. உலக அன்னையாகிய தேவி அந்தக் கண்ணுக்குள் வந்து நின்றாள். 'தாயே நீ தான் இந்தத் தரும சங்கடத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். என்னுடைய அம்மாவைப் போல நீ தோன்றுகிறாய். என்ன அழகு! என்ன இளமை! என்று ஏதேதோ சொன்னான். வாய் பேசவில்லை. இதயம் தான் பேசியது. அனுக்கிரகம் செய்கிறேன். என்று சொல்லி அன்னை மறைந்து விட்டாள்.

சத்தியவிரதன் கண்களை மலர விழித்துப் பார்த்தபோது வில்லும் கையுமாக வேடன் அங்கே நின்று கொண்டிருந்தான். அவனை நோக்கிச் சத்தியவிரதன் இப்போது ஒரு வார்த்தை சொல்ல விரும்பினான். ஆனால் அது பேச்சாக வரவில்லை. ஒரு சுலோகமாக வந்தது. "யாபச்யதி" என்று தொடங்கியது சுலோகம். அதன் பொருள் "எவன் பார்க்கிறானோ அவன் பேசுகிறான் இல்லை: எவன்

பேசுகிறானோ அவன் பார்க்கிறானில்லை: உடம்பைத் தடிப்பேற வளர்ப்பதையே பயனாகக் கருதியிருக்கும் வேடனே! அடிக்கடி என்ன கேட்கிறாய்? ஆச்சரியம்!.

வேடனுக்கே ஒன்றுமே விளங்கவில்லை. 'ரிஷியே! பசிக்கு என்ன செய்யலாம்? நான் பட்டினி கிடப்பேன். ஆனால் என் மனைவி மக்கள்........என்று சொல்லி முடிப்பதற்குள்ளே தன் பசிக்கு உணவாகத் தேடி வைத்திருந்த காய்கனி கிழங்குகளையெல்லாம் அவனிடம் கொடுத்துவிட்டான் சத்தியவிரதன். அருள் வாக்காகிய சுலோகம் இனிய குரலில் இசையழகுடன் வெளிப்பட்டது. வார்த்தை புரியாவிட்டாலும் உள்ளம் உள்ளத்தோடு பேசிவிட்டது. வேடன் பதில் சொல்லாது வீட்டுக்குப் போய் விட்டான். தேவியால் அருளப் பெற்ற சத்தியவிரதனோ கருணைக் கடலாய் ஞானக் கடலாய் விளங்கினான். 'இவன் மகா பண்டித ரிஷீ' என்ற புகழ் அந்தப் பிரதேசத்திற்கு அப்பாலும் பரவியது.

இந்த அற்புதத்தை தேவதத்தனும் அவன் மனைவியும் கேள்விப்பட்டார்கள். அதிசய யோகி ஒருவரைப் பார்க்கலாமென்று எண்ணி வந்தவர்கள் தங்கள் புத்திர ரத்தினத்தைக் கண்டு ஆச்சரிய பரவசராயினர். அதிக மரியாதையுடன் மகனைத் தங்கள் இருப்பிடத்துக்கு அழைத்துக் கொண்டுபோனார்கள். கோபிலரின் கோபமும் எத்தகைய அற்புத நற்பயனை விளைவித்துவிட்டது என்ற களிப்பில் மூழ்கினர்.

அடிபட்டு வந்த பன்றியைக் கண்டதும் இரங்கி "ஹ்ரு ஹ்ரு" என்ற தொனியுடன் தன் இரக்கத்தை வெளியிட்டுக் கூச்சலிடத் தொடங்கினானாம் சத்தியவிரதன். அதைத் தேவி தனக்குரிய மந்திர பீஜாட்சரமாக மதித்துக் கருணை செய்து கவிவாணனாகவும் செய்து விட்டாளாம் சத்தியவிரதனை. இப்படி அனுக்கிரகிக்கப் பெற்ற பின்பு சத்தியவிரதன் சக்தி வழிபாட்டை முனிவர்களுக்கிடையே பெரிதும் பரப்பி வந்தான் என்பர்.

சத்தியத்தையும் அஹிம்சையும் பொருத்தி சக்தி வழிபாட்டின் சாராம்சம் இது எனக் காட்டியது சத்தியவிரதனின் சிறப்பு.....

# மனிதர்களும் தெய்வங்களும்

மனந்தான் மனிதர்களை நடத்தி வருகிறது. மனத்தின் போக்குப்படித்தான் மனிதர்கள் நடந்து வருகின்றனர். மனம் தூய்மையாக இருக்கவேண்டும். தெளிவாக இருக்கவேண்டும். உறுதியாக இருக்கவேண்டும். இப்படி மனம் அமைந்து விட்டால் அவர்களுடைய எண்ணங்களும் செயல்களும் நல்லவையாகவே அமையும். அவை வெற்றியையும் தரும். வாழ்க்கையிலேயும் துன்பங்கள் குறையும். அமைதியும் ஆனந்தமும் பெருகும்.

மனம் ஆசையின் பிடியிலே சிக்கிக் கொள்ளும்போது அது தன் தெளிவை இழந்துவிடுகிறது. தன் உறுதியை மறந்துவிடுகிறது. ஆசையின் போக்கிலேயே எண்ணங்களையும் செயல்களையும் மனம் செலுத்துகின்றது. இதனால் துன்பங்களும் சோகங்களும் தோல்விகளும் மனிதரைப் பற்றுகின்றன. வாட்டங்களும் வறுமையும் சூழ்கின்றன.
ஊலகில் உள்ள எல்லாப் பொருள்களும் இறைவனுக்குச் சொந்தமானவை: உலகிலுள்ள எல்லா உயிர்களும் இறைவனின் பிள்ளைகள்: எனவே உலகிலே அவையவை தத்தமது இன்றியமையாத தேவைக்கு மேல் எதையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த எண்ணம் உலகில் வளர்ந்துவிட்டால் மனித சமுதாயத்தைப் பற்றியுள்ள எல்லா வகையான சிக்கல்களும் நீங்கிவிடும். இந்த எண்ணம் ஏற்படுவது அரிதுதான்.

மனிதன் மட்டுமே இந்த உலகத்தில் பேராசைப்பட்டு பல இன்னல்களையும் அடைகிறான். மற்றைய உயிரினங்கள் எல்லாம் சற்றும் பேராசைப்படுவது இல்லை. தத்தமது அன்றாட தேவைகளை இயற்கையிலிருந்து முயன்று பெற்றுக் கொண்டு அவை நிம்மதியாக வாழ்கின்றன. அவற்றையும் மனிதன் தன்னுடைய பேராசையால் துன்புறுத்துகிறான். அவற்றையும் தன் நலத்துக்கு பயன்படுத்திக் களிக்கிறான்.

அறிவு நிலையில் உயிரினங்கள் தம்முள் வேறுபடுகின்றன. உடலின் அமைப்பிலும் தமக்குள் வேறுபடுகின்றன. ஆனால் எல்லாம் இயற்கையின் விதிப்படியே சற்றும் மாறாமல் வாழ்ந்து வருகின்றன. ஓரறிவு உயிரின் முதலாக ஐந்தறிவு உயிர்கள் வரை அவை தத்தம் இயற்கைப் படியே வாழ்கின்றன. தத்தம் இனத்துக்குரிய நன்மைகளிலேயே செயற்படுகின்றன. இதை மாற்றிக் கொள்ளும் எண்ணமே அவற்றுக்குக் கிடையாது.

ஆனால் சிந்திக்கும் ஆற்றலும் தன்னையும் உலகையும் பகுத்தறிந்து உண்மை காணும் பகுத்தறிவும் அறிவும் பெற்றுள்ள மனிதன்தான் தவறுகளைச் செய்கிறான். தன் இனத்துடனேயே பகையும் பூசலும் விளைத்து ஆணவத்தால் பல தீய செயல்களில் ஈடுபட்டுத் தடுமாறுகிறான். பிறரைத் தொல்லைப் படுத்தித் தானும் தொல்லைப் படுகிறான். தனக்குக் கிடைத்த அறிவை மனிதன் சரியாகப் பயன்படுத்தாமல் தவறாகப் பயன்படுத்துவது தான் இதற்குக் காரணம். மனதைத் தெளிவு படுத்திக் கொள்ளாமல் மனத்தைக் கெடுத்து வாழ்வையும் கெடுத்து கொள்வதுதான் இதற்குக் காரணம்.

மனித சமூகத்தின் இந்த அல்லல்களைக் களைவதற்கு வழி என்ன? எப்படி மனிதர்களை நெறியாக வாழ வைப்பது? எப்படி உண்மையை உணரச்செய்வது? நம் முன்னோர்களில் அறிவாளர்கள் இதனைப்பற்றி சிந்தித்தனர். அறிவு என்பது யாது? தீமைகளிலிருந்து ஒருவனை விலக்கி நன்மைகளிலேயே செல்வதற்கு உதவுவது தான் அறிவு. இந்த அறிவைத் தீமைகளில் செலுத்தும்போது எண்ணங்களும் செயல்களும் தீமைகளில் செல்லுகின்றன. இதற்கு யார் யார் பொறுப்பு? இப்படித் தவறாக நடந்து கொள்ளும் மனிதன்தான் பொறுப்பு. எனவே பாவ புண்ணியங்கள் மனிதர்களை மட்டுமே பற்றுகின்றன. இயற்கை விதிப்படி நடக்கும் மற்றைய உயிரினங்களைப் பாவ புண்ணியங்கள் பற்றுவதில்லை. அறியாமையால் தவறு செய்பவர்களையும் பாவ புண்ணியங்கள் பற்றுவதில்லை. ஒரு வேடன் காட்டு விலங்குகளை வேட்டையாடிக் கொண்டு வருவான். ஒரு கடலோடி மீன்களைப் பிடித்து வருவான். இவை இவர்களின் இயற்கை. விலங்கை கொன்ற பாவமும் மீனைக் கொன்ற பாவமும் இவர்களைச் சார்வதில்லை.

ஆனால் உடல் வேறு உயிர்வேறு என்று ஆராய்ந்து தெளிந்த அறிவாளன் ஒருவன் ஒன்றின் உடலை விட்டு அதன் உயிரைப் பிரிப்பது பெருந்தவறு என்பதை உணரவேண்டும். ஓர் ஆட்டை வெட்டுவதும் ஒரு மனிதனை வெட்டுவதும் செயலளவில் உயிர்க்கொலையே என்று அறியவேண்டும். அறிந்து உயிர்க்கொலையை விட வேண்டும். ஊன் உண்பதையும் விட முயலவேண்டும்.

அறிவு விளக்கம் பெறாத குழந்தைப் பருவத்தில் ஒருவன் செய்யும் செயல்களையும் பேசும் பேச்சுக்களையும் அவன் வளர்த்தபின் அப்படியே தொடர முடியாது. தன் வயதுக்குத் தக்க புத்தியுடன் நடந்து கொள்ளவேண்டும். இதுதான் உலக நியதி. சமுதாய நடைமுறை: அறிவு பெற்றவனின் கடமை.

ஆகவே அறிவைப் பெற்ற மனிதர்கள் அந்த அறிவால் மேன்மை பெறுவதற்கு முயல வேண்டும். அந்த அறிவால் உலக சுகங்களை மிகுதியாகப் பெறுவதற்கு முனைவது அவர்கள் வழி மாறிப் போவதாகவே ஆகும். இப்படி வழி மாறிப்போகின்றவர்கள் மனிதர்கள் மட்டுமேதான். எனவே இந்த மனிதர்களை அறிவுறுத்தி நெறிப்படுத்தும் பொறுப்பு மகாஞானிகளுக்கு ஏற்பட்டது. உலக அமைப்பில் உண்மை நோக்கத்தை உணர்ந்த அவர்கள் மனிதர்களை இந்த அறிவுக்கேட்டிலிருந்து தடுத்து மீட்பதற்கு அவர்களிடம் வலுவான தெய்வ பக்தியை வலுப்படுத்துவதே வழியென்று கண்டனர்.

இந்த உலகில் உள்ள உயிரினங்களுள் நம் கண்ணுக்குத் தெரிவனவற்றுள் எல்லாம் மனிதனே அறிவால் உயர்ந்தவன். இந்த உயர்வுக்கு அவனுடைய அறிவின் பயனான புத்திக்கூர்மையே காரணமாகும். ஒரு புலியோடு எதிர்த்து நின்று ஒரு மனிதனால் அதை வெல்லமுடியாது. ஆனால் அந்தப் புலியைத் தொலைவில் இருந்தே ஈட்டியை எறிந்தோ அம்பைச் செலுத்தியோ துப்பாக்கியால் சுட்டோ அந்த மனிதனால் எளிதாக கொன்றுவிட முடியும். ஆறறிவின் சக்தியால் மனிதன் படைத்துள்ள கருவிகள் பலவும் மனிதனுக்கு இந்தப் பெரு வலிமையை தருகின்றது.

இப்படியே மனிதனுக்கும் மேலான சக்தி படைத்தவையாக ஆவியுருவோடு, மனிதக் கண்ணுக்கு புலப்படாத உடலோடு இந்த உலகில் சுற்றுகின்ற உயிர்வகைகளும் இருக்கின்றன என்று அறிஞர்கள் கண்டறிந்து கூறியுள்ளனர். இவற்றின் செயல்களாலேதான் மனிதர்களுக்கு நன்மைகள் தீமைகள் ஏற்படுகின்றன என்றும் கூறியிருக்கின்றனர். இவற்றை மனிதர்கள் வணங்கி வந்தால் இவை மனிதர்களுக்கு உதவி செய்வனவாகும் என்றும் கூறியுள்ளனர்.

மக்களிடையே நிலவி வரும் தெய்வ வழிபாடுகள் பலவும் இந்த நம்பிக்கையின் பயனாக தோன்றியவைதாம். இந்த தெய்வங்களிற் சில, மனிதரைப் போலவே குணங்களையும் செயல்களையும் பெற்றவை. இவை தமக்கு வேண்டியவர்களுக்கு நன்மையும் வேுண்டாதவர்களுக்கு தீமையும் செய்பவை. இதன் மேல் இந்த தெய்வங்களையும் இவ்வுலகில் உள்ள அனைத்தையும் படைத்துக் காத்து, இயக்கி வரும் நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய முப்பெருங்கடவுள்களைப் பற்றிய சிந்தனையும் ஏற்பட்டது. இந்தப் பெரும் கடவுள்களின் கருணைக்கும் காவலுக்கும் உட்பட்டு விடும் போது மனிதர்களுக்கு என்றும் இவை துணைநின்று உதவும் என்னும் உறுதியும் உண்டாயிற்று.

எங்கும் பரவி நிற்கும் இம் முப்பெரும் கடவுள்க்கு எதையுமே மறைக்கமுடியாது என்பதால் தவறு நினைப்போர் இவர் சினம்கொல்வோர் என்று அஞ்சி இந் நினைப்பை கைவிட்டனர். 'கடவுள் நம்பிக்கை' இவ்வாறு ஒவ்வொருவரின் உள்ளத்திலும் நின்று அவர்களை எச்சரிக்கின்றது. இவர்களை காக்கின்றது. அவர்களை ஊக்கப்படுத்துகின்றது. அவர்களை தெளிவுபடுத்துகின்றது.

இந்த நம்பிக்கையானது உயிரோடு கடவுளை ஒன்று படுத்தி வருகின்றது. உயிரின் அறிவோடு இந்த நம்பிக்கை கலந்து ஒன்றி விடுகின்றது. இதனால் உடலை நடத்துகின்ற உயிரினுடைய சக்தி மிகுதியாகிறது. உடலின் இச்சைகளும் தூண்டுதல்களும் மனதைத் தம்பக்கமாகத் திருப்பி விடாமல் உயிர் மனத்தைக் காத்துக் கொள்ளுகின்றது. மனத்தின் இழுவையிலே சிக்கிக் கொண்டு தன்னையும் தன் சக்தியையும் இழந்துவிடாமல் உயிர் தன்னைக் காத்துக் கொள்ளுகின்றது. கடவுள் நம்பிக்கையின் பயன் இவ்வாறு ஒவ்வொருவரையும் பேணிக் காக்கின்றது. மேலான ஞான நிலையை நோக்கி மனிதர்கள் முன்னேறவும் தூண்டிச் செலுத்தி அவர்களை உயர்த்துகின்றது.

ஒரு தவறை மறைவாகச் செய்துவிட்டு எவரும் அறியாமல் உலகிலே தப்பிவிடலாம். உலகில் இது நிகழக்கூடியதுதான். ஆனால் கடவுளின் கண்ணுக்கு எதையுமே மறைக்க முடியாது. இந்த உணர்வும் கடவுளின் தண்டனைக்குத் தப்ப முடியாது என்ற அச்சமும் தவறை செய்ய நினைக்கும் எண்ணத்தையே அழித்துவிடுகின்றன.

திருசாவுக்கரசரை கல்லிலே சேர்த்துக் கட்டிக் கடலிலே போட்டனர். அவரோ 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று சிவ நினைவிலேயே ஈடுபட்டு அதில் உறுதியாக இருந்தார். கல் மிதந்தது திருநாவுக்கரசரும் பத்திரமாக் கரையேறினார். இது வரலாறு. ஆபத்துக் காலத்தில் தெய்வசக்தி எப்படி உதவுகின்றது என்பதற்கு இது ஒரு சான்று.

இப்படி அடியார்கள் செய்துள்ள அற்புதங்கள் பலவற்றைப் பற்றியும் மக்கள் படிக்கவேண்டும். கடவுள் நம்பிக்கை இத்தகைய பேராற்றலைத் தருகின்றது என்று சிந்திக்கவேண்டும். அஞ்சுவது யாதொன்றும் இல்லை. இனி அஞ்ச வருவதும்

சிந்திக்கவேண்டும். அஞ்சுவது யாதொன்றும் இல்லை. இனி அஞ்ச வருவதும் இல்லை என்னும் மனவலிமையைப் பெற வேண்டும். நமனை அஞ்சோம் என்னும் சிறந்த வல்லமையையும் கடவுள் நம்பிக்கை ஒருவருக்கு தருகின்றது. இத்தகைய வரலாறுகளைக் கற்று மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

உலகில் உள்ள பொருள்களை எல்லாம் ‘உயிருள்ளவை எனவும் ‘உயிரற்றவை எனவும் இருவகையாகப் பிரிக்கலாம். நம் உடல் ஓர் உயிரற்ற சடப்பொருள். இதனுள்ளிருக்கும் உயிர்தான் ஒரு சித்துப் பொருள். அது நிற்கும் வரைதான் இந்த உடலில் இயக்கம் நடக்கும். சடப்பொருள்களிலும் சக்திவெளிப்படும். ஆனால் உயிர்பபொருளின் சக்தி மிகவும் சிறப்பானது. உயிரோட்டம் கொண்டது.

உயிரின் உயர்ச்சியாகவே மனிதப்பிறவி ஏற்பட்டது. உலக வாழ்வின் இன்ப துன்பங்களில் மட்டுமே முழுமையாக அமிழ்ந்து விட்டால் மேலும் மேலும் பிறவிதொடரும். உலக வாழ்வையும் செம்மையாக நடத்திக் கொண்டு உயிரின் உயர்ச்சியிலும் கருத்துச் செலுத்தவேண்டும். இதற்கும் கடவுளின் நினைப்பு உதவும்.

இனி இம் முப்பெருங் கடவுளரும் இவர்களுடைய தேவியரும் உலக மக்களின் மீது பெருங்கருணையுடையவர்கள் என்பதையும் அனைவரும் உணரவேண்டும். தீயோரை அழித்து நல்லோரைக் காக்க முந்துபவர்கள் இவர்கள் என்பதையும் அறியவேண்டும்.

“அடியார்க்கு அடியன் சிற்றம்பலவாணன்” என்பது ஆன்றோர் வாக்கு.நாம் அடியாராகிவிடும் போது நாம் வழிபடும் கடவுள்கள் நமக்கு அடியவர்களைக் போல் விளங்கித் துணை செய்து வருகின்றன என்பதை மறக்கக் கூடாது.

# NINE BELIEFS OF HINDUISM

Our beliefs determine our thoughts and attitudes about life, which in turn direct our actions, we create our destiny. Beliefs about sacred matters God, soul and cosmos are essential to one's approach to life. Hindus believe many diverse things, but there are a few bedrock concepts on which most Hindus concur. the following nine beliefs, though not exhaustive, offer a simple summary of Hindu spirituality.

1. Hindu believe in a one-pervasive Supreme Being who is both immanent and transcendent, both Creator and Unmanifest Reality.
2. Hindus believe in the divinity of our Vedas, the world's most ancient scripture, and venerate the Agamas as equally revealed. These primordial hymns are God's word and the bedrock of Sanatana Dharma, the eternal religion.
3. Hindu believe that the universe undergoes endless cycles of creation, preservation and dissolution.
4. Hind believe in karma, the law of cause and effect by which each individual creates his own destiny by his thoughts, words and deeds.
5. Hindus believe that the soul reincarnates, evolving through many births until all karmas have been resolved, and moksha, liberation from the cycle of rebirth, is attained. Not a single soul will be deprived of this destiny.
6. Hindu believe that divine beings exist in unseen worlds and that temple worship, rituals, sacraments and personal devotionals create a communion which these devas and Gods .
7. Hindus believe that and enlightened master, or satguru, is essential to know the Transcendent Absolute, as are personal discipline, good conduct, purification, pilgrimage, self-inquiry, meditation and surrender in God.
8. Hindus believe that all life is sacred, to be loved and revered and therefore practice ahimsa, noninjury, in thought, word and deed .
9. Hindus believe that no religion teaches the only way to salvation above all others, but that all genuine paths are facets of God's light, deserving tolerance and understanding.

Himalayan Academy Publications www.Gurudeva.org

From the sacred teaching of Satguru Sivaya Subramunyasuwami.